# கனமழை எச்சரிக்கை: முதல்வர் வலியுறுத்தல்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

உருவாக்கப்பட்டுள்ளது என்றும், 276 JCBக்கள், 10 படகுகள், 30 ஜெனரேட்டர்கள், 250 நீர் இறைப்பான்கள், 43 மர அறுப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்களும், 62 நிவாரண முகாம்களும் தயார் நிலையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

பின்னர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு 64 பல்துறை மண்டலக் குழுக்கள், 48 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், 660 நிவாரண முகாம்களும், 121 JCBக்கள், 317 படகுகள், 81 ஜெனரேட்டர்கள், 206 நீர் இறைப்பான்கள், 154 மர அறுப்பான்கள், 31 தண்ணீர் லாரிகள் உள்ளிட்ட உபகரணங்களும் தயார் நிலையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை!**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சியர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்த முதலமைச்சர் அவர்கள், கனமழையின் தாக்கத்தினை எதிர்கொள்ள பொதுமக்களின் பாதுகாப்பு கருதி பின்வரும் அறிவுரைகள் வழங்கினார்.

- 15.10.2024 அன்று சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும்.
- 15.10.2024 முதல் 18.10.2024 வரை தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்தே பணிபுரிய அறிவுறுத்த வேண்டும்.
- தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினர் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- வெள்ளத்தால் பாதிக்கக்கூடிய பகுதிகளில் மீட்பு படகுகள் இன்றே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
- மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுடைய பொறுப்பு மாவட்டங்களுக்கு சென்று, ஆயத்த பணிகளையும், மீட்பு, நிவாரணப் பணிகளையும் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.
- பொதுமக்களின் வசதிக்காக மெட்ரோ இரயில் மற்றும் பறக்கும் இரயில்களின் சேவைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்.
- உணவுத் துறை மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயராமல் அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- தங்குதடையின்றி ஆவின் நிறுவனம் மூலம் பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்.
- முதியோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களில் போதுமான உணவுப் பொருட்களை இருப்பு வைக்க அறிவுறுத்த வேண்டும்.
- நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைப்பதோடு, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் இருந்து முன்கூட்டியே பொதுமக்களை நிவாரண முகாம்களில் தங்க வைக்க வேண்டும்.
- ரொட்டி, குடிநீர் பாட்டில்கள் நிவாரண மையங்களில் இன்றே இருப்பு வைக்க வேண்டும். மேலும், மருத்துவ வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- மழை வெள்ளத்தால் போக்குவரத்து பாதிக்கப்படும் போது, பொதுமக்களுக்கு உடனடியாக மாற்று வழித்தடம் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- அனைத்து மாவட்டங்களிலும் சாலைப்பணிகள் நடைபெறும் இடங்களில் இரவு நேரத்தில் போதுமான ஒளிரும் பட்டைகள் மற்றும் பாதுகாப்பு தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும்.
- மின் உற்பத்தி தடைபடாமல் இருக்கவும், மின் விநியோகம் சீராக இருக்கவும், கட்டுப்பாட்டு மையத்தில் கூடுதலான பணியாளர்கள் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.
- முட்டுக்காடு, பக்கிங்ஹாம் கால்வாய் கலைஞர் கருணாநிதி பாலம் அருகில், ஒக்கியம் மடுவு ஆகிய இடங்களில் நீர்வடிவதற்கான தடைகளை நீக்குவதற்கு போதுமான இயந்திரங்களை இருப்பில் வைக்க வேண்டும்.
- மழை அளவு, அணைகளின் நீர்வரத்து ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்து அணைகளில் நீர் மேலாண்மை செய்ய வேண்டும்.
- பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் வசிக்கும் முதியோர், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மீட்புப் பணிகளுக்கு தேவையான நீர் இறைப்பான்கள், மர அறுப்பான்கள் JCB இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- தடையற்ற குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய போதுமான ஜெனரேட்டர்களை வைத்திருக்க வேண்டும்.
- பொது சுகாதாரத்தைப் பேணிக் காக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**பொதுமக்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய அறிவுரைகள்**

- விவசாயிகள், மீனவர்கள், நான்கு சக்கர மற்றும் இரு சக்கர வாகன உரிமையாளர்கள், விடுதிகளில் தங்கி இருப்பவர்கள், பயணங்களை திட்டமிட்டுள்ள வர்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தொழிற்பேட்டைகள், வணிக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், நடைபாதை வியாபாரிகள், கட்டுமானப் பணியை மேற்கொள்பவர்கள் கனமழைக்கான திட்டமிடுதலையும், முன்னேற்பாடுகளையும் செய்து கொள்ள வேண்டும்.
- தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மாநகராட்சி மற்றும் மாவட்ட நிருவாகத்தின் அறிவுரையின்படி முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு செல்ல வேண்டும்.
- முக்கியப் பொருட்கள் மற்றும் ஆவணங்களை நீர் புகா வண்ணம் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.
- கனமழை எச்சரிக்கையை முன்னிட்டு பொதுமக்கள் கடற்கரை, சுற்றுலா தலங்கள், வழிபாட்டு தலங்கள், நீர்நிலைகள் ஆகிய பகுதிகளில் கூடவேண்டாம்.
- அறுந்து கிடக்கும் மின் கம்பிகளிலிருந்து விலகி இருக்க வேண்டும்.
- கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள், முதியவர்கள் ஆகியோருக்கு தேவையான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.
- பொதுமக்கள் சமூக வலைதளங்களில் பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம். அரசு அலுவலர்கள் அளிக்கும் முறையான முன்னெச்சரிக்கைகளின்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், மற்றும் அரசு உயர் அலுவலர்களும், காணொலிக் காட்சி வாயிலாக செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். அருண்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபு சங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மூன்றாம்பட்டி ஊராட்சி, கேத்துநாயக்கன்பட்டி கிராமம், இலங்கை வாழ் தமிழர் முகாமில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் திட்டத்தின் கீழ், ரூ.5 கோடியே 53 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் 96 இலங்கை தமிழர் குடியிருப்பு கட்டுமானப் பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 22 இலட்சத்து 56 ஆயிரம் மதிப்பில் பேவர் பிளாக் சாலை பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.நாசர் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, முன்னிலையில் நேற்று முன்தினம் (14.10.2024) துவக்கி வைத்தனர். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.மணிமேகலை நாகராஜ், ஒன்றிய குழு தலைவர் திருமதி. உஷாராணி குமரேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### ஒன்றிய பி.ஜே.பி. அரசில் ஆறு நாள்களுக்கு ஒரு ரயில் விபத்து!

# “விபத்தில்லாப் பயணம்” என்ற - அந்த நாளும் வந்திடாதோ?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



*சென்னை, அக்.16-*

*ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியில் ஆறு நாள்களுக்கு ஒரு ரயில் விபத்துக்குக் காரணம் என்ன? ரயில்வேக்கு என்று இருந்த தனிப் பட்ஜெட்டை நீக்கி, முக்கியத்துவம் கொடுக்காதது ஏன்? ‘விபத்தில்லா பயணம்’ என்பதே மக்களின் எதிர்பார்ப்பு! ஒன்றிய பி.ஜே.பி. அரசு என்ன செய்யப் போகிறது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*சென்னைக்கு அருகே கவரைப்பேட்டை என்ற ரயில் நிலையத்தில், பொன்னேரி அருகில் 11.10.2024 அன்று இரவு 8.30 மணியளவில் ரயில் மோதி பெரு விபத்து நடந்துள்ளது. 13 ரயில் பெட்டிகள் சரிந்ததில் பல பயணிகள் படுகாயம் அடைந்துள்ளனர். தடத்தில் நின்று கொண்டிருந்த சரக்கு ரெயில் மீது மைசூரில் இருந்து தர்பங்காவுக்கு சென்று கொண்டிருந்த பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில் மோதியதால், இந்தக் கோர விபத்து நடந்து, ரயில் பெட்டிகள் தீப்பற்றி எரிந்தும் உள்ளன.*

*மோடி அரசில் இத்தகைய கோர ரயில் விபத்துகள் ஒன்றல்ல, இரண்டல்ல; 6 நாள்களுக்கு ஒரு விபத்து என்பதுதான் இந்த அரசின் “சப்கா சாத், சப்கா விகாஸ்“ சாதனையோ என்று சாமானிய மக்கள்கூட கேட்கிறார்கள்.*

*மோடி அரசின் ரயில்வே நிர்வாகம் அதிகமான ‘வந்தே பாரத்‘ ரயில்களை ஓட்டி, அதனை நேரிலும், காணொலிமூலமும் அநேக தடங்களில் பிரதமர் மோடியே பச்சைக் கொடி காட்டித் தொடங்கி வைக்கிறார்! மகிழ்ச்சிதான்; ஆனால், பயணம் பத்திரமாகியுள்ளதா?*

*ஆனால், இப்படி ஆறு நாளைக்கு ஒரு விபத்து என்ற விபரீதச் செய்தி அவ்வரசுக்குப் பெருமையா?*

*பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு 2014-2019, பிறகு 2024 (மைனாரிட்டி அரசு) ஆகிய காலகட்டங்களில் ரயில்வே துறை நிர்வாகம் எப்படிப் பட்ட அலங்கோல நிர்வாகமாக ஆகி, பல அமைச்சர்கள் மாற்றம் - மக்களுக்கு பெரும் ஏமாற்றம் என்பதைத் தவிர, வேறு என்ன பெருமைப்படத்தக்க சாதனைகள் இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன?*

*எடுத்த எடுப்பில், முந்தைய ஆட்சியில் இருந்த நடைமுறையை தன்னிச்சையாக தலைகீழாக மாற்றி, ஆண்டுதோறும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு, விவாதங்களுக்கு ஆளாகி, பொது பட்ஜெட்டுக்கு முந்தைய பட்ஜெட்டாக இருந்த ரயில்வே பட்ஜெட் முறை மாற்றப்பட்டு, பொது பட்ஜெட்டுடன் இணைக்கப்பட்டு, ரயில்வேமீது செலுத்தப்பட்ட தனி கவனம் - விவாதங்களே நாடாளுமன்றத்தில் காணாமற்போன நிலைதான் ஒரே மாறுதல்.*

**லாலுபிரசாத் சாதித்துக் காட்டினார்!**

*ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியைச் சேர்ந்த லாலுபிரசாத் அவர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த வேலு அவர்களும் முறையே அமைச்சர், இணையமைச்சராக ரயில்வே துறையில் இருந்த போதுதான் அதன் பொற்கால ஆட்சி நடைபெற்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.*

*நிதிப் பகிர்வில் எப்படி எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள், ஒன்றிய பா.ஜ.க. அரசால் வஞ்சிக்கப்படுகிறதோ, அப்படியே ரயில்வேயில் புதிய திட்டங்கள் அறிவிப்பு ஏதும் இல்லாததோடு, பழைய அறிவிக்கப்பட்ட திட்டங்களும் எடுத்துக் கொள்ளப்பட எந்த அறிவிப்பும் இல்லை.*

*சென்னை மெட்ரோ ரயில் திட்டம் போன்ற - நிதி ஒதுக்கீடு - மாநிலத்திற்குத் தரவேண்டியதை எத்தனை போராட்டத்திற்குப் பிறகு ஒதுக்கி, கடனாக ஒரு பகுதி, மற்ற மாநிலங்களில் இல்லாத விசித்திர நிபந்தனை - நிதி அமைச்சகம் வழியேதான் என்று இடையில் ஒரு தடுப்பணை கட்டுவது - போன்ற ஒன்றை நிதியமைச்சகம் அமைத்துள்ளது.*

*இத்தனைக்கும் தமிழ்நாடு அரசின் Fiscal Management என்ற நிதி ஆளுமையை பல பொருளாதார நிபுணர்கள் பாராட்டியும் இந்நிலை.*

*பிரதமர் மோடி ஆட்சியில், ஜனநாயக ரயிலும், அரசமைப்புச் சட்டம் என்ற தண்டவாளத்திலிருந்து நகர்ந்து விபத்துகளை (கருப்புச் சட்டங்களை) ஏற்படுத்துவதிலேயே அதிகமாக ஆறு நாள்களுக்கு ஒருமுறை ரயில் பயணிகளை அச்சுறுத்தும் முறைக்கு முற்றுப்புள்ளி ஏற்படுத்திட வேண்டாமா?*

*ஏழை, எளிய, வெகுமக்களின் போக்குவரத்து ரயில் பயணம் மூலம் தான். எனவே, அதன் மீது ஒன்றிய அரசு போதிய கவனம் செலுத்தவேண்டும்.*

*கவரைப்பேட்டை ரயில் விபத்து ஏற்பட்டபொழுது, தமிழ்நாடு அரசின் உடனடி நடவடிக்கை - விபத்தால் காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளைச் செய்ததும், மீட்புப் பணிகளை விரைவுபடுத்திய தமிழ்நாடு முதலமைச்சரின் ஆளுமை விதமும் பாராட்டத்தக்கதாகும்.*

*சாலைப் பயணம் ‘விபத்தில்லா பயணம்’ Zero Accidents என்ற இலக்குபோல, ரயில் பயணங்களுக்கும் இப்படிப் பட்ட நிலை வராதது ஏன்? என கேட்டு, ‘அந்த நாளும் வந்திடாதோ’ என்று ரயில் பயணிகள் ஏங்குகின்ற ஏக்கம் எப்போது தீரப் போகிறது?*

*‘Ess Luggage, More Comfort’ ‘குறைந்த பயணப் பொதி; நிறைந்த மகிழ்ச்சி’ என்பது போல, விபத்தில்லா ரயில் பயணம் விழைவாக இல்லாமல், செயலாகவே மலர வேண்டியது அவசியம், அவசரம்.*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### ‘தினபூமி’ நாளிதழின் உரிமையாளர்

# மணிமாறன் - சாலை விபத்தில் மரணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 16–

‘தினபூமி’ நாளிதழின் உரிமையாளர் மணிமாறன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்ததை அடுத்து, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

**தூத்துக்குடி மாவட்டம் கோவில் பட்டி அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் தினபூமி நாளிதழின் உரிமையாளர் மணிமாறன் அவர்கள் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.**

**அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், தினபூமி பணியாளர்கள், பத்திரிகைத் துறையைச் சேர்ந்த தோழர்கள் என அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### சென்னையில் பொதுவிநியோகத் திட்டத்தில்

# 19 மண்டலங்களிலும் மக்கள் குறைதீர் முகாம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, அக்.16-*

*சென்னையிலுள்ள 19 மண்டலங்களில் வருகின்ற 19.10.2024 அன்று பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-*

*பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி அக்டோபர் 2024 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் 19.10.2024 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற வுள்ளது.*

*குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும். மேலும், பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொது மக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.*



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வல்லத்திராக்கோட்டை இராமசாமி தெய்வானை அம்மாள் அரசு மேல்நிலைப்பள்ளியில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் நேற்று முன்தினம் (14.10.2024) வழங்கினார். உடன் முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நாச்சியார்கோவில் ஆர்.பாண்டுரெங்கன்**

**அக்டோபர் 16 (2011)**



**தஞ்சை மாவட்டத்தில் கழகம் துவங்கியபோது கும்பகோணம் பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்த பெருமைக்குரியவர்.**

**கே.கே.நீலமேகம், மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, குடந்தை பத்மநாபன் ஆகியோருடன் இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**குடந்தை, நாச்சியார்கோவில் பகுதிகளில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரை அழைத்து பல பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**